# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1776/3 - 2012 සැප්තැම්බර් 17 වැනි සඳුදා - 2012.09.17

*1776/3 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அமைச்சின் இல. : எல்டி/05/2008/ஐஆர்/174.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

கண்டி மாவட்டத்தில், தெல்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில், ஹேவாவிஸ்ஸ கோரலையில், கபடாகம தெற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள, நில அளவை மா அதிபரினால் தயாரிக்கப்பட்ட மு.பி. மஹா 6176 வரைபடத்தில் 1.2275 ஹெக்டாயர்ஸ் விஸ்தீரணம் கொண்ட துண்டு இல. 1 தொடக்கம் 3 வரையிலான கலே வத்த மற்றும் கலேகும்புர ஆகிய காணிகளின் விபரங்கள் :-

01. **துண்டு இல. 01**
காணியின் பெயர் : கலேவத்த ; உரிமை கோருபவர் : திருமதி சீதா சிரிசேன, விஜயபாகு கந்த, ராவனாகொட, இலுக்கொடுவ ; விஸ்தீரணம் : 0.3648 ஹெக்டயார்.

02. **துண்டு இல. 02**
காணியின் பெயர் : கலேகும்புர ; உரிமை கோருபவர் : திருமதி சீதா சிரிசேன, விஜயபாகு கந்த, ராவனாகொட, இலுக்கொடுவ ; விஸ்தீரணம் : 0.6851 ஹெக்டயார்.

03. **துண்டு இல. 03**
காணியின் பெயர் : கலேகும்புர ; உரிமை கோருபவர் : திரு. பியதாச சிரிசேன, 413/8, ஹாரகம பாதை, மாளிகாதென்ன ; விஸ்தீரணம் : 0.1776 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2012 ம் வருடம் நவெம்பர் மாதம் 21ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு தெல்தோட்டை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஜே. பீ. யூ. கே. ஜயரத்ன,
பிரதேச செயலாளர்,
தெல்தோட்டை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
தெல்தோட்டை,
2012.08.28.

10 -87

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல. : ஹங்கு/03/2/1/84.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

நுவரெலியா மாவட்டத்தில், ஹங்குரன்கெத பிரதேச செயலாளர் பிரிவில், 495பி, யட்டிஹங்குரன்கெத கிராம சேவகர் பிரிவில் உள்ள நில அளவை மாஅதிபரினால் தயாரிக்கப்பட்டுள்ள இல. நு 2807 மற்றும் 2012.06.11 ம் திகதி கொண்ட பிரதான வரைபில் துண்டு இல. 01 இன் விபரம் :

*01.* **துண்டு இல. 01**

*காணியின் பெயர் : மொணரபொலஹேன ; விபரம் : பாவனைக்குட் பட்ட வயற் காணி, வீட்டுத் தோட்டம், தற்காலிகமாகப் பயிரிடப்பட்டுள்ளது ; உரிமை கோருபவர் : ஆர். எம். சீ. ரத்நாயக்க, சுனில் நிவச, மாஓயா, ஹங்குரன்கெத ; விஸ்தீரணம் : 0.0202 ஹெக்டயார்.*

*மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2012 ம் வருடம் நவெம்பர் மாதம் 05 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு ஹங்குரன்கெத பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.*

*ஆர். டி. பி. சுமனசேகர,*
*பிரதேச செயலாளர்,*
*ஹங்குரன்கெத.*

*பிரதேச செயலாளர் அலுவலகம்,*
*ஹங்குரன்கெத,*
*2012.09.12.*

*10 -123*

திருத்தம்

***காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)***

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

*1705/30ம் இலக்கமும் 2011.05.15ம் திகதியும் உடைய இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலைத் திருத்துதல்*

*அநுராதபுரம் - பாதெனிய வீதி அபிவிருத்தித் திட்டத்துக்காக காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 07ம் உறுப்புரையின் பிரகாரம் இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் 1705/30 ம் இலக்கமும் 2011.05.13 ஆந் திகதியும் உடைய அதி விஷேட வர்த்தமானியில் 3ஏ ம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 462 ம் இலக்கக் காணித் துண்டின் விஸ்தீரணம் 0.0022 ஹெக்டயார் எனத் திருத்தப்படல் வேண்டும் என இத்தால் அறிவிக்கின்றேன்.*

*டபிள்யூ. எஸ். சேனாதிஸ்ஸ,*
*பிரதேச செயலாளர்,*
*அம்பன்பொல.*

*பிரதேச செயலகம்,*
*அம்பன்பொல,*
*2012.09.13.*

*10 - 124*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.*